**மொறட்டுவைப் பல்கலைக்கழகம்**
**பதவி வெற்றிடம்**

இப்பல்கலைக்கழகத்தின் **மருத்துவ பீடத்தில்** வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது அவற்றுடன் இணைந்த உயர் கல்வி நிறுவனங்களில் பணி புரியும் **ஸ்திர, நிரந்தர ஊழியர்களிடமிருந்து மாத்திரம்** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை, தாம் பணிபுரியும் நிறுவனத்தின் செயலாளர்/பதிவாளர்/முதல்வர்/பணிப்பாளர் ஊடாக, **“உதவிப்பதிவாளர், ஸ்தாபனப்பிரிவு (கல்வி-சாரா), மொறட்டுவைப் பல்கலைக்கழகம்” என்ற முகவரிக்கு 26.04.2024 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் மற்றும் சரியாக பூரணப் படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

**<u>மருத்துவ பீடம்</u>**
**<u>தொழில்நுட்ப அதிகாரி தரம் 2, “ஆ" பிரிவு</u>**
**தேவையான தகைமைகள்:**

(அ) க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாத வகையில் 5 திறமைச் சித்திகள் அடங்கலாக 6 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல். கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச் சித்திகள் அவசியம்.

அல்லது

(ஆ) மூன்று அமர்வுகளிற்கு மேற்படாத வகையில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது அவற்றுடன் இணைந்த உயர் கல்வி நிறுவனங்களில் எட்டு (8) வருடங்களிற்கு குறையாத திருப்திகரமான நிரந்தர சேவையையும் கொண்டிருத்தல்.

அல்லது

(இ) உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் ஆய்வுகூட உதவியாளராக பதினைந்து (15) வருடங்களிற்கு குறையாத திருப்திகரமான நிரந்தர சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.

**குறிப்பு:** தெரிவு செய்யப்படும் நபர், முதலில் 3 வருட பயிற்சி காலத்தின் கீழ் "பயிலுனர் தொழில்நுட்ப அதிகாரி" ஆக நியமிக்கப் படுவார். பயிற்சிக் காலத்தின் முடிவில், ஆய்வுகூட நடவடிக்கைகள் சம்பந்தமான நிபுணத்துவம், உபகரணங்களை கொள்வனவு செய்யும் கட்டளைகளை பிறப்பித்தல், உபகரண பதிவு ஏட்டை பராமரித்தல் மற்றும் ஆங்கில தட்டச்சு திறமை ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டு தொழில்நுட்ப அதிகாரி தரம் 2 பிரிவு "ஆ" வில் பதவி அமர்த்தப்படுவர்.

**சம்பள முறைமை:** ரூ. 31,625-7x300;10x355-37,275/-p.m. (மாதாந்தம்)-U-MT1 (III A)

ஸ்தாபனங்கள் சுற்றறிக்கை கடிதம் இலக்கம் 06/2020 இன்படி பல்கலைக்கழகக் கட்டமைப்பினுள், ஒரு பதவியில் இருந்து இன்னொரு பதவிக்கு நியமனம் செய்யப்படும்போது அரச ஸ்தாபனக் கோவை அத்தியாயம் VII இன் பிரிவு 09 இன் பிரகாரம் சம்பந்தப்பட்ட சம்பள நிலையில் வைக்கப்படும்.

**தேர்வு செய்யும் முறை:** தகுதிகாண் பரீட்ச்சை மற்றும் நேர்முகப் பரீட்ச்சை

Sgd. பதிவாளர்
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
28.03.2024